மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருக்கின்றது என்பதையும் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும், எவ்விதக் காழ்ப்புணர்ச்சியும் கிடையாது; மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும், எந்தெந்த வகையில் நல்லது செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அறிந்துதான் அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தங்கள் வாயிலாக காங்கிரஸ் பேரியக்க உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதில் மேற்கொண்டு விவாதம் ஒன்றும் இல்லை, உட்காருங்கள்.*

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து, தமிழக மக்களுடைய நெஞ்சமெல்லாம் இன்றைக்கு தெய்வமாக குடிகொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்கு என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில், அவர்கள் விட்டுச் சென்ற அனைத்துப் பணிகளையும் இன்றைக்கு அடிபிறழாது, தவறாது, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, ஓராண்டில் நூறாண்டு பேசும் சாதனையைப் படைத்து வரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், ஓராண்டில் நூறாண்டு பேசும் சாதனை படைக்கத் துணையாக இருக்கின்ற அண்ணன் துணை முதல்வர் அவர்களுக்கும் வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[திரு. இரா. துரைக்கண்ணு] [2018 மே 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்ககண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

(ஆ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(அ) கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018–2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.